# உடன்பிறப்பே... 68

நீரை.மகேந்திரன்

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த இரா.தர்மலிங்கம் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

# இரா.தர்மலிங்கம் : கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்!



**1958**-ஆம் ஆண்டு, நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் இணைந்த கூட்டுக் கூட்டத்தில் தமிழில் ஒலித்தது, கழகத்தின் கொள்கை முழக்கம்.

“வடநாட்டு மக்களின் மொழியை-மொழித் துறையிலோ அல்லது பண்பாட்டுத் துறையிலோ தொடர்பற்ற தெற்குப் பகுதியில் வாழும் மக்களின் மேல் திணிப்பது விவேகமுள்ள செயல் அல்ல, விபரீதத்தை விளைவிக்கக்கூடிய செயல் என்பதை இம்மன்றம் உணர வேண்டும். இந்தியத் துணைக்கண்டத்தின் முதலமைச்சர் நேரு அவர்கள், சென்னை வந்தபோது அவர் கண்ட கருப்புக் கொடிகள், நேரு அவர்களிடம் தனிப்பட்ட முறையில் மக்கள் கொண்ட வெறுப்பு அல்ல, வடநாட்டு ஆதிக்கத்துக்கும், இந்தி ஆதிபத்தியத்துக்கும் காட்டப்பட்ட எதிர்ப்பு என்பதைத்தான் காட்டுகிறது” என முழங்கிய அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் பேரறிஞர் அண்ணாவின் நம்பிக்கைக்குரிய தம்பிகளில் ஒருவர் இரா.தர்மலிங்கம். கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர் எனக் கழக வரலாற்றில் இடம்பெற்றவர்.

1957-ஆம் ஆண்டு கழகம், தேர்தலில் பங்கேற்க முடிவு செய்து, அந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலில் நின்று, தனது முதலிரண்டு வெற்றிகளைப் பதிவு செய்தது. சட்டமன்றத்துக்கு 15 பேரும், நாடாளுமன்றத்துக்கு 2 பேரும் தேர்வாகினர். அந்த 2 பேரில் ஒருவர்தான் இரா.தர்மலிங்கம். அந்த வெற்றியைப் பதிவு செய்த தொகுதி, திருவண்ணாமலை. அதனால், பேரறிஞர் அண்ணாவுக்கு மிகவும் பிடித்த ஊர்களில் ஒன்று திருவண்ணாமலை.

கழக வரலாற்றில், அந்த வெற்றியை யாரும் மறக்க முடியாது. ஏனென்றால், அப்போது தி.மு.கழகம் அரசியல் கட்சியாக அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை, என்பதால், தி.மு.க வேட்பாளர்கள் சுயேச்சை சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றனர்.

அந்த நாட்களை, 1957-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20-ஆம் தேதி ‘திராவிட நாடு’ பத்திரிகையில் எழுதினார், பேரறிஞர் அண்ணா. “புதியதோர் கட்சி, பத்தாண்டுகளுக்குள் வளர்ந்துள்ள கட்சி, அதன் சார்பில், இரண்டு பேர் வந்துள்ளனராமே, என்ன சொல்லப் போகின்றனர் என நமது சம்பத்தையும், தர்மலிங்கத்தையும் காணும் ஆர்வமும், ஆசையும் நாடாளுமன்றத்தினருக்கு ஏற்படுவதாக ‘டெல்லி மெயில்’ நிருபர் எழுதி இருக்கிறார்” எனக் கொண்டாடி இருந்தார், அண்ணா. அந்த நம்பிக்கையை அளித்தவர்கள் இருவரும்.

திருவண்ணாமலையில் இரா.தர்மலிங்கமும், நாமக்கல்லில் ஈ.வெ.கி.சம்பத்தும் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றாலும், சம்பத், தி.மு.கவை விட்டு வெளியேறியதால், கழகத்தின் முதல் எம்.பி. என்னும் பெருமைபெற்றவர் தர்மலிங்கம்.

## வெற்றியும் விருந்தும்

1957-ஆம் ஆண்டில், தேர்தல் வெற்றிகளுக்குப் பின்னர், வட ஆற்காடு மாவட்டக் கழகத்தின் மூன்றாவது மாநாடு திருவண்ணாமலையில் வெகு கொண்டாட்டமாக நடைபெற்றது. மாநாட்டின் வரவேற்புக்குழுச் செயலாளர்களாக இருந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர் ப.உ.சண்முகம் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் அவர்களும்தான். அந்த மாநாட்டுக்கு வந்த கழகத்தினருக்கு மிகச் சிறப்பான விருந்தளித்து மகிழ்ந்தனர் இருவரும். அன்றைய வட ஆற்காடு மாவட்டக் கழக வளர்ச்சிக்குத் தூணாக நிற்பவர்கள் இருவரும் என்பதை அம்மாநாடு கட்டியம் கூறியது.

கழகத்தை வளர்ப்பதில் தர்மலிங்கம் எப்படிப்பட்டவர் என இப்போதும் நினைவு கூர்கின்றனர் கழகத்தினர். “எதிரிகளாக யாரைக் கருதுகிறாரோ, அவர்களுக்கு அஞ்ச மாட்டார் இந்தக் கருத்தியல் கழகர். அதேநேரம் பதிலுக்குப் பதில் ரகமாக களத்திலும் நிற்கும் கலகர். கட்சியினருக்கு ஒரு பாதிப்பு என்றால், அங்கு முதலாவதாக சென்று நிற்பவர் தர்மலிங்கம்தான்” என்கின்றனர்.

திருவண்ணாமலை, மண்டித் தெருவில் கழகக் கொடியேற்ற வேலைகள் நடந்தன. ஆனால், தி.மு.க கொடியை அங்கு ஏற்றக்கூடாது என அப்போது செல்வாக்கு செலுத்திய சிலர் தடுத்துள்ளனர். கழகத்தினர் இந்தத் தகவலை தர்மலிங்கம் அவர்களிடம் கூறி, ‘பொறுமை காப்போம்’ என்றும் குறிப்பிட்டுள்ளனர். வெகுண்டெழுந்த தர்மலிங்கம், “கொடியை ஏற்றக்கூடாது எனச் சொல்லியது யார்?” எனக் களத்துக்கு வந்து கொடி ஏற்றி,

**பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோருடன் தோளோடு தோள் நின்ற முன்னோடித் தலைவரை, முதல் நாடாளுமன்ற உறுப்பினரை என்றும் நினைவில் வைப்போம்.**

அங்கு சிறு கூட்டம்போட்டு, “எதிர்த்து நின்றவர்கள் யார் என்றாலும் இப்போது வரட்டும்” என முழங்கி இருக்கிறார்.

## தனிப்பட்ட பகை அல்ல!

1958-ஆம் ஆண்டு ஜனவரி மாதம், பிரதமர் நேருவுக்கு கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் சென்னையில் கைது செய்யப்பட்டார் தர்மலிங்கம். அந்தப் போராட்டத்தின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் என்கிற எந்த அடையாளமும் இல்லாமல் கழகத்தினருடன் தோழராகக் களம் கண்டவர்.

விலைவாசி உயர்வுப் போராட்டத்தின்போது, அண்ணா உள்பட கழக முன்னோடிகள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்ட போது, வேலூர் மத்திய சிறையில் அண்ணாவுடன் அடைக்கப்பட்டார் தர்மலிங்கம். பகலில் அரசியல் பிரச்சினைகளைப் பேசுவதும், இரவில் பக்கத்து அறையில் இருக்கும் அண்ணாவுக்குக் கேட்கும்படி பெருங்குரலெடுத்துப் பாடவும் செய்வார் தர்மலிங்கம் “நமது பாராளுமன்ற உறுப்பினர், பாட்டு என்று எண்ணிக்கொண்டு ஓசை கிளப்புவார்- அந்தப் பாகவதர் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருப்பேன்” என தனது கடிதங்களில் அந்தக் காட்சியைப் பதிவு செய்துள்ளார் அண்ணா.

## அண்ணாவை அசைத்த தம்பி

1962-ஆண்டு தேர்தலின்போது காஞ்சி சட்டமன்றத் தேர்தலில் தான் வெற்றிபெறவில்லை என்றாலும், தோல்வியடைந்த கழகத்தினருக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருக்கிறார் அண்ணா. அண்ணா தோற்ற வருத்தத்தில் கழகத்தினர் அலை அலையாகச் சந்திக்க வருகின்றனர். அப்போது, அண்ணா வருத்தமடைந்து விடக்கூடாது என, வெற்றிபெற்று வீட்டுக்குக்கூடச் செல்லாமல், அண்ணாவுடன் நின்று, அவர் வருத்தப்படாமல் பார்த்துக் கொண்டவர் தர்மலிங்கம்.

அண்ணா இராஜ்யசபை எம்.பி.யாகத் தேர்வாகி, டெல்லி சென்றபோது, அவருக்கு உற்றத் துணையாக நின்றவர் ராமலிங்கம்தான். கழகத்தினர் திரண்டு வந்து அண்ணாவை டெல்லிக்கு விமானம் ஏற்றியபோது, அருகில் அமர்ந்து பயணித்தவர் தர்மலிங்கம். தவிர, அண்ணா எம்.பி.யாக வேண்டும் என வலியுறுத்தியவர்களில் அவரும் ஒருவர், “இதமாகப் பேசிப் பேசி, நான் இராஜ்ய சபைக்குச் செல்வதற்கு இசையும்படி செய்வதிலே அவர்தான் வெற்றிபெற்றார்” என அண்ணா பதிவு செய்கிறார். “டெல்லியில், நல்ல உணவு சமைத்துக் கொடுத்து, நாடாளுமன்ற நூலகத்தையும் அறிமுகம் செய்து வைத்து தர்மலிங்கம் என்னைக் கவனித்துக் கொள்கிறார், நீ கவலைப்படாதே தம்பி” என தர்மலிங்கத்தின் அன்பு குறித்தும், அண்ணா எழுதி இருக்கிறார்.

அண்ணாவுக்கு தம்பியாக உடன் நின்றது போலவே, கலைஞரின் உடன்பிறப்பாக உறுதுணை செய்தவர் தர்மலிங்கம். அண்ணா மறைவுக்குப் பின், கழகத்தின் தலைவர் பொறுப்பை உருவாக்கும் நெருக்கடி வந்தபோது, அந்தப் பொறுப்பை உருவாக்கவும், அதை கலைஞர் ஏற்கவும், துணை நின்றவர்களில் அவரும் ஒருவர்.

மொழிப்போர், விலைவாசி உயர்வுப் போராட்டம், நெருக்கடி நிலை என கழகத்தின் அத்தனைக் காலகட்டங்களிலும், நேரம் காலம் பாராது நின்ற தூண் தர்மலிங்கம், ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்டக் கழகத்தின் செயலாளராக 15 ஆண்டுகள் பொறுப்பு வகித்தார். திருவண்ணாமலைத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக 10 ஆண்டுகள், திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவர் ஆகிய பொறுப்புகளில் கழகத்தின் கொள்கை நோக்கத்துடன் செயல்பட்டவர் தர்மலிங்கம். தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தலைவர், வட ஆற்காடு விற்பனைக் குழுவின் 10 ஆண்டு கால தலைவர் எனவும் பணியாற்றி பெயர் பெற்றவர்.

1922-ஆம் ஆண்டு பிறந்த தர்மலிங்கம் அவர்கள், கழகத்தின் சோதனையான காலகட்டத்தில், 1986-ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று மறைந்தார். அவருக்கு 2022-ஆம் ஆண்டு நூற்றாண்டுக் கொண்டாட்டம் என்பதால், அவர் நினைவினைப் போற்றும் நிகழ்ச்சிகளை நடத்தி நினைவுகூர்ந்தது மாவட்டக் கழகம். பெரியாரிடம் சுயமரியாதை பயின்று, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோருடன் தோளோடு தோள் நின்ற முன்னோடித் தலைவரை, முதல் நாடாளுமன்ற உறுப்பினரை என்றும் நினைவில் வைப்போம்.

...துடிக்கும்

## அனுபவங்களில் பிறந்த எழுத்து!



கேரளத்தில் அதிகாலையில் வீடு வீடாக செய்தித்தாள் விநியோகித்தும் இரவில் மண் அள்ளும் பொக்லைன் இயந்திர ஓட்டுநராகப் பணிபுரிந்தும் வந்த இளைஞர், அந்த மாநிலத்தின் உயரிய இலக்கிய விருதை வென்றுள்ளார்.

கேரளாவைச் சேர்ந்த கே.அகில் எனும் 28 வயது இளைஞர், குடும்பச் சூழல் காரணமாக பல்வேறு வேலைகளைச் செய்து வருகிறார். 12-ஆம் வகுப்புக்குப் பின், படிப்பைத் தொடர முடியாமல் பாதியிலேயே நிறுத்தியவர். அதிகாலையில் செய்தித்தாள் போடுவது, இரவில் பொக்லைன் இயந்திர ஓட்டுநர் எனப் பல பணிகளைச் செய்துகொண்டே, கிடைக்கும் நேரத்தில் எழுத்தார்வத்தையும் வளர்த்துக் கொண்டு எழுதத் தொடங்கியுள்ளார்.

2020-ஆம் ஆண்டில், ‘நீலச்சடையான்’ என்கிற சிறுகதைத் தொகுப்பையும் கொண்டு வந்துள்ளார். இந்தத் தொகுப்புக்கு தற்போது கேரள சாகித்ய அகாடமி நிறுவிய ‘கீதா ஹிரண்யன்’ எனும் உயரிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தினசரி கூலித் தொழிலாளி எழுதிய நூல், மாநிலத்தின் மதிப்புமிக்க இலக்கிய விருதைப் பெற்று சாதனை படைத்துள்ளது எனச் சமூக வலைதளங்களில் பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

நாட்டுப்புறக் கலைஞர்களின் வாழ்க்கையை அந்த நூலில் எழுதி இருக்கிறார் அகில். அனுபவங்களிலிருந்து மட்டுமே தலைசிறந்த எழுத்துகள் உருவாகும் என்பதை நிரூபித்த நூலுக்கு, அங்கீகாரம் அளித்துள்ளது கேரளம்.

## :ப்ளாஷ்பேக்



ஆ.ஜெயராமன்,



### தேனாம்பேட்டையில் பறந்த கழகக் கொடி!

1987-ஆம் ஆண்டு சென்னை, தேனாம்பேட்டையில் கழகக் கொடியேற்றி, உரையாற்றும் நிகழ்ச்சிக்கு வருகை தந்தார், அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள். அவர், உரையாற்றி முடித்த பிறகு கழக வளர்ச்சி நிதி வழங்கினேன். அப்படியான தருணத்தில் கழக நிர்வாகிகளோடு எடுத்துக் கொண்ட புகைப்படம்.

**– ஆ.ஜெயராமன்,**
**முன்னாள் பொதுக்குழு உறுப்பினர்,**
**சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### தொடர்ந்து நடந்த போராட்டம்!

1953-ஆம் ஆண்டு கலைஞர் பொறுப்பேற்று நடத்திய கல்லக்குடிப் போராட்டம், அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின்னரும் தொடர்ந்து நடைபெற்றது. ஜூலை 15-ஆம் தேதியில் இருந்து, அவர் விடுதலையாகும் நவம்பர் 29-ஆம் தேதி வரை 137 நாட்கள் நடைபெற்றது. கழகத் தோழர்கள், தினமும் கொடி பிடித்துக்கொண்டு முழக்கங்கள் எழுப்பியவாறு ‘கல்லக்குடி’ என்கிற சுவரொட்டியை ரயில் நிலையப் பெயர்ப் பலகையில் ஒட்டிவிட்டுச் செல்வர். தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னரும் தொடர்ந்து நடந்த போராட்டம், அவர்களின் விடுதலைக்குப் பின்னரும் சில நாட்கள் நடைபெற்றது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

551

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131